செ.வெ.எண்:58/2016 நாள்:19.08.2016

**<u>சிவகங்கை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு நிலையம் சார்பாக மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.</u>**

**<u>மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.</u>**

இன்று (19.08.2016) சிவகங்கை திறந்தவெளி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு நிலையம் சார்பாக மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, தமிழக அரசு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கியத்துவம் வழங்குவது போல், விளையாட்டிலும் அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மாணவர்கள் படிப்பில் அக்கறை காட்டுவது போல் விளையாட்டிலும் அக்கறை காட்டவேண்டும். அனைவரும் உடற்பயிற்சி மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளிலும், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறவேண்டும். விளையாட்டில் வெற்றி பெறுவது மட்டும் முக்கியமல்ல. விளையாட்டில் பங்கு பெறுவது என்பது அவசியம். சிறியவர், பெரியவர் என்பது இல்லாமல் அனைவரும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ விளையாட்டு முக்கியம். போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறவேண்டும் என்பதே குறிக்கோளாக கொள்ள வேண்டும். விளையாட்டுகளில் தன்னுடைய திறமையை வெளிப்படுத்த வேண்டும். தோல்வியை கண்டு துவண்டுவிடாமல், வெற்றி பெற விடாமுயற்சி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.ராமசுப்பிரமணியன், மாவட்ட ஆதிதிராவடர் நல அலுவலர் திருமதி.உமா, சிவகங்கை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கார்த்திகேயன் மற்றும் விளையாட்டுத்துறை பயிற்சி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.